மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாணவர்களின் எண்ணிக்கை தரப்படவில்லை.

திரு. வை. பாலசுந்தரம் : மாஸ்கோ நகரில் தமிழ் பள்ளி ஒன்றில் தமிழ் மொழி கற்றுக் கொடுக்கப்படுவதாக அறிந்தேன். அதைக் கற்றுக் கொடுக்க நம் அரசு தமிழ் ஆசிரியர் யாரையாவது அனுப்பி வைத்திருக்கிறதா?

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இது மதுரைப் பல்கலைக் கழகம் பற்றிய கேள்வி.

திரு. கா. காளிமுத்து : மதுரைப் பல்கலைக்கழகத்தில் ப்ரெஞ்ச், ரஷ்யன் மொழி கற்றுத்தர ப்ரெஞ்ச், ரஷ்ய நாட்டைச் சேர்ந்த பேராசிரியர்கள் அங்கு பணியாற்றுகிறார்களா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நான் முதலில் கூறிய படி, இன்டோ-ப்ரெஞ்ச் கல்ச்சரல் எக்ஸ்சேஞ்ச் ப்ரோக்ராம் அடிப் படையில் ப்ரெஞ்ச் ஆசிரியர்கள் வந்து ப்ரெஞ்ச் சொல்லிக் கொடுக் கிறார்கள். ரஷ்ய ஆசிரியர்கள் ரஷ்ய மொழி சொல்லிக் கொடுக்கிறார்கள்.

Shift system in Colleges

* 415 *Q.*—THIRU K. P. GOPAL : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether shift system will be inroduced in colleges of the State in view of the heavy rush for admission; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. கே. பி. கோபால் : சட்டக் கல்லூரியில் இம்முறை வெற்றிகர மாக நடைபெற்று வருவதால், அந்த அடிப்படையில் மீண்டும் பரிசீலிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மிக நெருக்கடி இருக்கிற கல்லூரிகளில் இந்த முறையை மேற்கொள்ளலாமா என்ற கருத்து தெரிவிக்கப்பட்டபோது சென்னைப் பல்கலைக் கழகமும், மதுரைப் பல்கலைக்கழகமும் அதற்கு அவசியமில்லை, இப்போதுள்ள அமைப்பில் கல்லூரிகளில் போதிய இடவசதி இருப்பதால், ஷிப்ட் முறை தேவை இல்லை என்று கருதுகிறார்கள். ஷிப்ட் முறை வருவதால் வேறு டிஸிப்ளின் மற்றவைகளைக் காப்பாற்றுவதில் பல சங்கடங்கள் ஏற்படும் என்று கருதுவதால் தேவை இல்லை என்று கருதுகிறார்கள். மிக நெருக்கடியுள்ள கல்லூரிகளில் இந்த ஷிப்ட் முறையைக் கொண்டுவந்தால், நெருக்கடியைத் தவிர்க்கலாம் என்ற கருத்தை அரசு தெரிவித்தும் சிண்டிகேட் அவையினர் ஆராய்ந்து இப்போது அவசியமில்லை, தேவைப்படும்போது பார்த்துக்கொள்ளலாம் என்றும் அமைதிக் குறைவு அதிகமாக ஆக வாய்ப்பு ஏற்படும் என்று கருதுவதால், இந்த முறை கொண்டுவரப்படவில்லை.

இப்போதுள்ள இடவசதி போதுமான அளவிற்கு இருக்கிறது என்றும் கருதப்படுகிறது. சென்னை போன்ற பட்டணங்களின் வெளிப் புறங்களிலுள்ள கல்லூரிகளில் இடவசதி போதுமான அளவிற்கு இருக்கிறது என்று பல்கலைக்கழக துணைவேந்தர்கள் அறிவித்திருக் கிறார்கள்.

திரு. பி. எஸ். மணியன் : வெளிநாடுகள் சிலவற்றில் உள்ளதைப் போல் காலை எட்டு மணிக்குத் தொடங்கி ஒரு மணிக்கு முடிந்து விடுகிற செயற்குறிப்புபற்றி அரசாங்கம் ஆலோசனை செய்யுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அந்தக் கருத்தும் கூறப்பட்டு வருகிறது. சில கல்லூரிகளில் அந்தக் கருத்தை ஏற்று நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். உதாரணமாக, வைஷ்ணவா கல்லூரி எட்டு மணிக்கு துவங்குகிறார்கள். கந்தசாமி நாயுடு கல்லூரி காலை 7-30-க்கு தொடங்கி ஒரு மணிக்கு முடித்து விடுகிறார்கள்.

DR. H.V. HANDE : Sir, is it not a fact that the position of admission in the colleges has become very acute and if so, what are the steps taken by this Government to tackle the position? Also what are the steps taken by this Government to see that those persons who are working in offices get admitted in the evening colleges? They are also given an opportunity in evening colleges, and some thing like a shift only, for the evening college course the colleges will be utilised. In spite of this fact, is it possible to have evening colleges, may I know from the Hon. Minister the steps taken by this Government to see that this extraordinary rush is properly tackled and some solution is given?

May I know whether chemistry, physics and other things are also taught in the evening colleges, whether laboratory equipments have been given, what about the position in the Government Arts College and also New College?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : புதுப் புதுக் கல்லூரிகள் ஆண்டுக்காண்டு ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. மேலும் இட வசதியைப் பொறுத்து ஆங்காங்கு அந்தந்த வகுப்புகளுக்கு மாணவர்களை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளவும் வழிவகைகள் செய்து தருகிறார்கள். சில புது வகுப்புகள் பி.ஏ. கலையியல், அறிவியல் வகுப்புகளைத் தொடங்க அந்தந்தக் கல்லூரிகள் பல்கலைக்கழகத்திற்கு விண்ணப்பித்துக் கொள்கிறார்கள். பல்கலைக்கழகமும் அந்த செக்‌ஷன்களை அதிகமாக்குவதற்கும் இடவசதியைப் பொறுத்து அனுமதி வழங்குகிறார்கள்.

இந்த ஆண்டு ஆங்கில வகுப்புகளைத் தொடங்குவதற்கு மட்டும் 95 செக்‌ஷன்கள் பல்வேறு கல்லூரிகளுக்குக் கொடுத்து ஆறாயிரத்துச் சில்லறை மாணவர்கள் அதிகமாக சேருவதற்கு வாய்ப்பு ஏற்பட் டுள்ளது. குறிப்பிட்ட சில கல்லூரிகளில் ரஷ் இருப்பதால், ஒருவர் பல் கல்லூரிகளுக்கு விண்ணப்பிப்பதால், மொத்தத்தில் விண்ணப்பங் கள் ஏராளமாக இருக்கின்றன. கடைசியில் கணக்கு கொடுக்கும் போது சரியாக ஆகிவிடுமென்றுதான் துணை வேந்தர்கள் கருதுகிறார் கள். அந்த வகையில் இப்போது இடவசதி ஏற்படுத்தப்பட்டிருக் கிறது.

[1971 ஜூலை 24

திரு. நா. வீராசாமி : இட நெருக்கடி ஏற்பட்டால் அந்த நிலைமையைப்பற்றி யோசிக்கலாம் என்று சொன்னார்கள். சென்னை நகரத்தைப் பொறுத்தவரையில் கிட்டத்தட்ட ஆறாயிரம் மாணவர்கள் இன்னும் இடம் கிடைக்காமல் அவதிப்படுவதாகத் தெரிகிறது. ஆகவே சென்னை நகரத்திற்கு மட்டுமாவது இந்த ஷிப்ட் விஸ்டத்தை கல்லூரிகளில் துவக்குவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அரசு இந்த யோசனையைச் சொல்லிற்று. ஆனால் பல்கலைக்கழகங்கள் ஏற்றுக் கொள்ளவில்லையென்று கூறினேன். அதற்கு அவசியமில்லை என்று பல்கலைக்கழகங்கள் கருதுகின்றன.

திரு. கே. என். குமாரசாமி : கல்லூரிகளில் இட நெருக்கடி என்று சொல்லப்படுகிறது. கல்லூரியில் சேருவதற்கான மார்க்ஸ் இவ்வளவு வேண்டும் என்று அரசாங்கம் திட்டவட்டமாக அறிவித்துவிடுமானால், இவ்வளவு மார்க்குகளுக்கு மேற்பட்டவர்கள்தான் அனுமதிக்கப் படுவார்கள் என்று சொன்னால் எவ்வளவு இட நெருக்கடியிருக்கிறது என்பது தெரியும் அல்லவா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறும் ஒரு கருத்தும் உலவி வருகிறது. அதற்கு மாறு பட்ட கருத்தும் இருக்கிறது. திட்டவட்டமாக அந்த வகையில் முடிவு எடுத்து பல்கலைக்கழகங்களுக்கு அறிவிக்க முடியுமா என்பது பற்றி யோசித்துத்தான் செய்யவேண்டும். கல்லூரிகளுக்கு "எலிஜிபிள் ஃபார் காலேஜ் கோர்ஸ்" என்று சர்ட்டிபிகேட் பெற்றவர்கள்தான் அனுமதி கோருகிறார்கள். அவரவர்கள் அவரவர் களின் தன்மைக்கேற்ப, ஆங்காங்குள்ள வசதிகளுக்கேற்ப சேர்ந்து கொள்கிறார்கள். அவர்களை ஏன் கட்டுப்படுத்த வேண்டும் என்ற ஒரு கருத்தும் இருக்கிறது. ஓரளவிற்குக் கட்டுப்படுத்துவதால், தரமுள்ள வர்கள்தான் வருவார்கள், மற்றவர்களுக்கு வாய்ப்பில்லாமல் போய் விடும் என்றும் சொல்லப்படுகிறது. அதுபற்றி கன்ஸல்டேட்டீவ் கமிட்டியில் வைத்து ஆலோசித்த பின்னர்தான் முடிவு எடுக்க வேண்டும்.

THIRU B. VENKATASWAMY : May I know from the Hon. Minister whether there is a Telugu class in M.A. Literature in the evening classes?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி தனிக் கேள்வி வேண்டும்.

திரு. ப. முத்துசாமி : தற்போது தமிழ்நாட்டில் பல கல்லூரிகளில் பி.யு.ஸி., பீ.ஏ. வகுப்புகளில் இடமிருக்கிறது என்று சொல்லப்படு கிறது. அவை பூர்த்தியாகிவிட்டனவா? பல கல்லூரிகளில் இன்னும் இடமிருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : இன்னும் சில நாட்கள் கழித்துதான் எவ்வளவு இடங்கள், எந்தெந்த கல்லூரிகளில் காலியாக இருக்கின்றன என்பதைத் தெரிந்து அப்படி காலியாக இருக்கிற இடங்களை அறிவிக்கும்படி, வானொலி மூலம் அறிவிக்கும்படி ஏற்பாடுகள் கூடச் செய்யவேண்டுமென்று கூறியிருக்கிறேன். முழுவதும் வந்த பிறகுதான் அந்தச் செயல் செய்யப்படவேண்டும்.